**சாவகச்சேரி பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சாவக்சேரி பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 57,562,303 கணக்குக்குக் கொண்டுவரப்படாமையால் திரண்டநிதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) 04 மோட்டார் வாகனங்களினை, சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் பெறுமதிகளை கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருந்தமையினால் மோட்டார்வாகனங்களின் பெறுமதி ரூபா 9,161,200 ஆல் கணக்குகளில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) உள்ளூராட்சி அலுவலர்களுடைய ஓய்வூதிங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 50,724 வருமான செலவுக் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் செலவினம் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ஈ) சபைக்குச் சொந்தமான 15 வகையான 60 காணி கட்டடங்களின் பெறுமதி கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(உ) 05 செலவினங்களிற்காக ஒதுக்கங்களில் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட பின்பு மிகுதி தொகை ரூபா 214,747 வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்காமையினால் ரூபா 214,747 இனால் வருமானம் குறைவாகக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

**1.3.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

சபையினால் அளவை பதிவேடு, காணி விற்பனவு வரி பதிவேடு, இழப்புக்களும் சேதங்களும் பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)விபரம் குறிப்பிடப்படாத முற்பணக் கணக்கு மீதி ரூபா 71,845 வினை அறவிடுவதற்கோ, பதிவழிப்பதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 145,210 இன்றுவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) செலுத்தப்பட வேண்டிய வைப்புக்கள் ரூபா 100,807 உரிய திணைக்களத்திற்கோ அல்லது உரிய நபருக்கோ செலுத்தப்படாமலுள்ளது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

உறுதிப்படுத்திய பயனாளிகள் பட்டியல் இல்லாமையின் காரணமாக ரூபா 50,680 பெறுமதியான கொடுப்பனவினை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

**1.3.6 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் அத்தியாயம் V இலக்கம் 148 (1) | வாகனங்கள், விலங்குகள் மீதான வரியை விதிப்பதற்கு பிரதேசசபைக்கு அதிகாரமளிக்கப்பட்ட போதிலும் அந்த வாகனங்கள், விலங்குகள் மீதான வரியானது குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் நிதிப்பிரமாணம். 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 2,720,145 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 44,710,142 ஆக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 27,936,006 ஆகவும் காணப்பட்டது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 16,774,136 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 17,885,039 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 2,267,037 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 15,618,002 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 83,055,335 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 48,570,097 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 34,485,238 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா |
| | 000 | 000 | 000 |
| ஆதனவரிகள் | 106 | 120 | 554 |
| குத்தகை வாடகைகள் | 14,930 | 11,769 | 182 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,402 | 1,518 | 6 |
| ஏனைய வருமானம் | 66,515 | 73,941 | 57 |
| **மொத்தம்** | **82,953** | **87,348** | **799** |

**2.4.2 ஆதனவரி**

---------------

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆதனங்களுக்கு ஆதன மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 வாடகை**

---------------

வாடகை ரூபா 45,875 இன்றுவரை அறவிடப்படாது நிலுவையாக உள்ளது.

**2.4.4 அனுமதிப்பத்திரக்கட்டணம்**

-----------------------------------

அனுமதிப்பத்திரக்கட்டணம் ரூபா 5,850 அறவிடப்படாமல் நிலுவையாக உள்ளது.

**2.4.5 ஏனைய வருமானம்**

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு உரித்தான 23 மயானங்களிற்கு மயானவரி சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையிலுள்ள 03 தொலைத் தொடர்பு கோபுரங்களிற்கான வருடாந்தவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.6 முத்திரைக் கட்டணம்**

--------------------------------

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 74,365,765 பெறுமதியான முத்திரைக் கட்டணம் அறவிடப்படாதுள்ளது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 98 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 79 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன்படி 20 பதவியினர் பற்றாக்குறையாகவும் 01 பதவியினர் மிகையாகவும் காணப்படுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டில் 29 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பாதீட்டில் ரூபா 36,578,420 முன்மொழியப்பட்டிருந்தும் இன்றுவரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(இ) 2016ம் ஆண்டில் குழாய்க்கிணறு அமைப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 75,000 உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாதுள்ளது.

(ஈ) திண்மக் கொட்டகை வேலி அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 101,272 பயன்படுத்தப்படாமலுள்ளது.

(உ) கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் வருடாந்தம் ஆகக்குறைந்தது 04 நடாத்தப்பட வேண்டும் எனினும், குறித்த சபையில் மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் மட்டுமே நடைபெற்றுள்ளது.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

சனசமூக நிலைய நன்கொடைகள் ரூபா 86,536 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் கை உழவு இயந்திரம் 5 வருடங்களுக்கு மேலாக பயன்பாடற்ற நிலையில் காணப்படுகிறது.

(ஆ) 02 சந்தைகள் 03 வருட காலமாக குறிப்பிட்ட தேவைக்கு பயன்படுத்தப்படாதுள்ளது.

**3.4 செயற்திட்டத்தின் தாமதம்**

ரூபா 9,287,475 பெறுமதியான 57 மூலதன வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாமலுள்ளது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 67,803 தொடக்கம் ரூபா 43,257,176 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது